## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கிராமிய மற்றும் பிரதேச குடிநீர் வழங்கல் செயற்திட்ட அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் கிராமிய மற்றும் பிரதேச குடிநீர் வழங்கல் செயற்திட்ட அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2022 மே 24 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2)ஆம் பிரிவின் பிரகாரம் இராஜாங்க அமைச்சின் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 மே 23 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாரளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கிராமிய மற்றும் பிரதேச குடிநீர் வழங்கல் செயற்திட்ட அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று இன்றி நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் ஆகியன கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

நிதிக்கூற்றுக்கள், ஒட்டுமொத்தமாக மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தொடர்பில் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு அவற்றை பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்களின் மீது தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம், கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும், என்னால்

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்காக அடிப்படையொன்றினை பெற்றுக்கொள்ளும் போது, மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணல் மற்றும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன. பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதற்கு, அவை தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் ஆகியவற்றால் ஏற்படுகின்றமை காரணமாக அமைகிறது.

- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் அபிப்பிராயமொன்றினை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாது, சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக உள்ளக கட்டுப்பாடு தொடர்பில் புரிந்துணர்வொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மற்றும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் ஒட்டுமொத்தமாக மதிப்பீடு செய்யப்பட்டன.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) அரசாங்கக் கணக்குகள் பணிப்பாளர் நாயகத்தின் எஸ்ஏ/எம்ஏஏ/02/01/01 ஆம் இலக்க 2022 சனவரி 12 ஆந் திகதிய கடிதத்தின் படி நிதிக்கூற்றுக்களிலுள்ள "அறிக்கையிடலுக்கான அடிப்படை" பந்தி திருத்தப்பட்டிருந்த போதிலும், அமைச்சினால் தயாரிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களில் அது வெளிப்படுத்தப்படாது முன்னைய ஆண்டின் தொகைகளிற்கான திருத்தங்கள் மாத்திரம் செய்யப்பட்டிருந்தன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 காசுப் பாய்ச்சல் கூற்று

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அமைச்சின் காசுப் பாய்ச்சல் கூற்றிலுள்ள செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சலின் கீழ் ஆளுக்குரிய வேதனாதிகள் மற்றும் இயக்கச் செலவினங்களிற்காக ரூபா 60,462,651 செலவிடப்பட்டுள்ளதாக இனங்காணப்பட்டுள்ள போதிலும், கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களின் படி அது ரூபா 518,315,186 ஆகக் காணப்பட்டமையால் செயற்பாட்டு நடவடிக்கைளிற்காக செலவிடப்பட்ட காசுப் பாய்ச்சல் ரூபா 457,852,534 குறைவாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. | ஆளனி திறன் அபிவிருத்திச் செலவினம் மற்றும் செயற்திட்ட மேம்பாட்டு அல்லது விரிவாக்கல் செலவினம் என்பன முதலீடாகக் கருதப்படுகின்றது. | அரசாங்கக் கணக்குகள் பணிப்பாளர் நாயகத்தின் 2021/03 ஆம் இலக்க 2021 நவம்பர் 26 ஆந் திகதிய அரசாங்க கணக்குகள் வழிகாட்டல்கள் 06 இன் படி நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | செயற்பாட்டு நடவடிக்கைளிலிருந்தான காசுப் பாய்ச்சலின் கீழான முற்பணங்களின் அறவீடு ரூபா 270,114 என இனங்காணப்பட்டிருந்த போதிலும், கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களின் படி மீளாய்வாண்டில் ரூபா 463,564 முற்பணங்கள் அறவிடப்பட்டிருந்தமை காரணமாக ரூபா 193,450 வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | 433-011 ஆம் இலக்க செலவினத் தலைப்பின் கீழ் முற்பணத் தீர்ப்பனவு ரூபா 270,114 ஆனதுடன் 433-012 செலவினத் தலைப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்ட கையேற்றல்கள் ரூபா 193,450 ஆகும். | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| (இ) | செயற்பாட்டு நடவடிக்கைளிலிருந்தான காசுப் பாய்ச்சலின் கீழ் முற்பணக் கொடுப்பனவு களாக ரூபா 472,365 இனங்கா ணப்பட்டுள்ள போதிலும், கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்ப ட்டிருந்த தகவல்களின் படி அது ரூபா 665,815 ஆகக் காணப்பட்டமையால் முற்பணக் கொடுப்பனவுகளின் பெறுமதி ரூபா 193,450 ஆல் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டி ருந்தது. | 433-011 ஆம் இலக்க செலவினத் தலைப்பின் கீழ் முற்பணக் கொடுப்ப னவு ரூபா 472,365 ஆனதுடன் ரூபா 193,450 என்பது 433-012 செல வினத் தலைப்பின் கீழான கையேற்றல்கள் ஆகும். | -மேற்படி- |
| (ஈ) | முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சலின் கீழ் பௌதீக சொத்துக்களை நிர்மாணித்தல் அல்லது அவற்றின் கொள்வன விற்காகவும் ஏனைய கையேற்புக்களிற்காகவும் ரூபா 461,002,147 செலவிடப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டி ற்காக அமைச்சினால் கொள்வனவு செய்யப்பட்ட பௌதீக சொத்துக்களின் பெறுமதி ரூபா 3,149,612 ஆக மாத்திரம் காணப்பட்டமையால் அந்த பெறுமதிகளிற்கு இடையே ரூபா 457,852,535 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | சொத்துக்களின் கையேற் புப் பெறுமதி மாத்திரமே கணக்காய்வில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள போதி லும், காசுப் பாய்ச்சல் கூற்றில் காண்பிக்கப்பட்டு ள்ள பெறுமதியில் பௌதீக சொத்துக்களை நிர்மாணித்தல் அல்லது அவற்றின் கொள்வனவு மாத்திரமன்றி ஏனைய முதலீட்டுக் கையேற்புக ளும் உள்ளடங்கியுள்ளன. | -மேற்படி- |

**1.6.2 பதிவேடுகள் மற்றும் புத்தகங்களை பேணுதல்**

அமைச்சினால் கீழே காண்பிக்கப்பட்டுள்ள சில பதிவேடுகள் பேணப்பட்டிருக்காததுடன், மேலும் சில பதிவேடுகள் நாளதுவரையாகவும் முறையாகவும் பேணப்பட்டிருக்காமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையில் அவதானிக்கப்பட்டது.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | **பொருளிருப்பு பதிவேடு**<br>நி.பி. 454(1) இன் படி பொருளிருப்புப் பதிவேடு நாளதுவரைப்படுத்தி பேணப் பட்டிருக்கவில்லை. | தற்போது பொருளிருப்புப் பதிவேடு நாளதுவரைப்படுத்த ப்பட்டுள்ளது | நி.பி. 454(1) இன் படி பொருளிருப்புப் பதிவேடு நாளதுவரைப்படுத்தி பேணப்படுதல் வேண்டும். |
| (ஆ) | **வாகன விபத்துக்கள் பதிவேடு**<br>விபத்துக்கள் பதிவேடு நாளதுவரைப் படுத்தி பேணப்பட்டிருக்கவில்லை | நாளதுவரைப்படுத்தப்பட்டுள் ளது. | வாகன விபத்துக்கள் பதிவேடு நாளதுவரைப்படு த்தி பேணப்படுதல் வேண்டும். |

(இ) **வாகன லொக் பதிவுப் புத்தகம்**

| | | |
|---|---|---|
| நி.பி. 1645 (அ) பிரகாரம் வாகனங்கள் தொடர்பான விபரங்கள், நுகரப்படும் எரிபொருள் அளவு, வாகன அனுமதிப் பத்திர விபரங்கள், வாகனங்களிற்கான பொறுப்புக்கூறல், மாற்றல் தொடர்பான விபரங்களும் வாகனப் பேணுகை மற்றும் திருத்தங்கள் தொடர்பான விபரங்களும் உள்ளடக்கப்பட்ட வாகன லொக் புத்தகம் பேணப்பட்டிருக்கவில்லை. | நீர் வழங்கல் அமைச்சுக்கு உரித்தான வாகனங்கள் மாத்திரம் இந்த அமைச்சின் பயன்பாட்டிற்காக வழங்கப்பட் டுள்ளன. வழங்கப்பட்ட நாள் முதல் குறித்த விடயங்கள் லொக் புத்தகத்தில் பதியப்பட்டுள்ளன. | நி.பி. 1645 (அ) பிரகாரம் வாகன லொக் புத்தகம் நாளதுவரையாக பேணப்ப டுதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

## 2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 433-1-2-0-1403 மற்றும் 433-1-2-0-1703 ஆகிய இரண்டு மீண்டுவரும் செலவின விடயங்களின் கீழான ரூபா 115,000 தேறிய நிதி ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது. | இந்த அமைச்சும் நீர் வழங்கல் அமைச்சு அமைந்துள்ள கட்டிடத்தி லேயே ஸ்தாபிக்கப்பட்டுள்ளமை யாலும், கொவிட் 19 நோய்த்தொற்று காரணமாகவும் எதிர்பார்க்கப்பட்ட எதிர்பார்க்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் இடம்பெறாமையால் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டது. | நிதிப்பிரமாணம் 50 இன் படி செலவின மதிப்பீடுகளை சரியாக தயாரித்தல் வேண்டும். |
| (ஆ) | 05 மீண்டுவரும் செலவின விடயங்க ளிற்கான ரூபா 1,975,000 நிதி ஏற்பாடுகள் நி.பி. 66 இன் கீழ் முழுமையாக ஏனைய செலவு விடயங்களிற்கு மாற்றப்பட்டிருந்தது. | சீருடைகளிற்கான கோரிக்கைகள் கிடைத்திருக்காமை, அலுவலக உதவியாளர் பதவிகள் நிரப்பப்படாமை மற்றும் நிலவிய கொவிட் நோய்த்தொற்று காரணமாக இயந்திரங்களை பயன்படுத்த முடியாமை காரணமாக எதிர்பார்த்த செலவினம் ஏற்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- |
| (இ) | 13 மீண்டுவரும் செலவினங்களிற்குரிய ரூபா 14.2 மில்லியன் தொகையான மதிப்பிடப்பட்ட நிதி ஏற்பாட்டிலிருந்து 30 சதவீதம் முதல் 97 சதவீதம் வரையான அளவு நி.பி. 66 இன் மூலம் ஏனைய செலவின விடயங்களிற்கு மாற்றப் பட்டிருந்தது. | எதிர்பார்த்த செலவினம் ஏற்பட்டிருக் காமையால் அமைச்சின் தேவைக் கேற்ப ஏனைய செலவின விடயங்களிற்கு மாற்றப்பட்டது. | -மேற்படி- |
| (ஈ) | இரண்டு மீண்டுவரும் செலவின விடயங்களிற்குரிய ரூபா 305,000 தேறிய நிதி ஏற்பாட்டிலிருந்து 50 சதவீத த்திற்கும் அதிகமான தொகை சேமிக்கப்பட்டிருந்தது. | இந்த அமைச்சும் நீர் வழங்கல் அமைச்சு அமைந்துள்ள கட்டிடத்தி லேயே ஸ்தாபிக்கப்பட்டுள்ளமை யாலும், ஆதனக் கடன்களிற்கான கோரிக்கைகள் கிடைக்காமையாலும் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டது. | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| (உ) | 03 மூலதனச் செலவின விடயங்களிற்கான ரூபா 1,150,000 தொகையான தேறிய நிதி ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது. | 19 நோய்த்தொற்று காரணமாக இயந்திரங்களினதும் உபகரணங்களினதும் பயன்பாடு குறைவடைந்தமையால் பராமரிப்புச் செலவினம் ஏற்பட்டிருக்காமை, SACOSAN அலுவலகம் செயற்படாமை காணமாக இவ்வாறு நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டது. | -மேற்படி- |
| (ஊ) | 11 மூலதனச் செலவு விடயங்களிற்காக கிடைத்திருந்த ரூபா 1,331.4 மில்லியன் தேறிய நிதி ஏற்பாட்டிலிருந்து 20 சதவீதம் முதல் 77 சதவீதம் வரையான வீச்சில் சேமிக்கப்பட்டிருந்தது. | எதிர்பார்த்தவாறு பயிற்சி நிகழ்ச்சித்திட் டங்கள் நடத்தப்படாமை, பட்டியல் களை தீர்ப்பதற்கு கட்டுநிதி கிடைக்காமை, கொவிட் நோய்த் தொற்று காரணமாக நாடு மூடப்பட்டமை, சந்தையில் நிர்மாணப் பொருட்களின் பற்றாக்குறை காரண மாக இவ்வாறு நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டது. | -மேற்படி- |

## 2.2 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இராஜாங்க அமைச்சரின் உத்தியோகபூர்வ கடமைகளுக்காக அமைச்சினால் வழங்கப்பட்ட வாகனம் விபத்துக்குள்ளானமையால் 2021 மே 12 முதல் 2021 செப்டெம்பர் 14 வரை வாடகை அடிப்படையில் ரூபா 2,836,523 செலவில் தனியார் நிறுவனம் ஒன்றிடமிருந்து வாகனமொன்று பெறப்பட்டிருந்தது. இந்தச் செலவின் காரணமாக, 433-01-01-1401 செலவின விடயமானது 218.64 சதவீதத்தால் விஞ்சியிருந்தது. மேலும், மேற்படி வாடகை வாகனத்தை 2021 மே 12 முதல் 2021 யூன் 10 வரை மட்டுமே பயன்படுத்த தனியார் நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்த போதிலும், 2021 செப்டம்பர் 14 வரை ஒப்பந்தம் ஒன்று இன்றி 03 மாத காலத்திற்கு ரூபா 1,665,598 செலுத்தப்பட்டிருந்தது. மேலும், வாகனத்திற்கான மாதாந்த வாடகைக் கட்டணத்தை செலுத்து கையில் பயணித்திருந்த தூரத்தை மைலோ மானி மூலம் தினசரி உறுதிப்படுத்திக் கொள்ளாது வாகன வழங்குனரால் சமர்ப்பித்திருந்த பட்டியல்களின் அடிப்படையில் 17,986 கி.மீ. இற்கு மேற்படி தொகையான ரூபா 2,836,523 செலுத்தப்பட்டிருந்தமையானது அரசாங்க நிதிப் பிரமாணங்கள் கோவையிலுள்ள நிதிப்பிரமாணம் 138 மற்றும் 139 முரணானதாகும் என்பது அவதானிக்கப்பட்டது. | காலநீடிப்புச் செய்யப்பட்ட உடன் படிக்கை சமர்ப்பிக்கப்படுகின்றது. கௌரவ இராஜாங்க அமைச்சரின் தனிப்பட்ட செயலாளரால் பட்டியல்கள் உறுதிப்படுத்தப்பட்டு பரிந்துரைக்கப்பட்ட பின்னர் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. | கொடுப்பனவு செய்கையில் நிதிப்பிரமாணம் 135 இன் பிரகாரம் செயற்படுதல் வேண்டும். |

## 2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிலுள்ள இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்பட்டுள்ளது.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணக்கமின்மை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16.2 ஆம் பிரிவு | அமைச்சின் வருடாந்த நிதிக் கூற்றுக்களுடன் இணைத்து வருடாந்த வரைவு செயலாற்றல் அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் | தேசிய கணக்காய்வுச் சடத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்படுதல் வேண்டும். |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் கோவை | | | |
| (i) நிதிப்பிரமாணம் 104 | 2021 ஏப்ரல் 04 ஆந் திகதி விபத்துக்குள்ளான KK-5237 ஆம் இலக்க வாகனத்திற்கான சேத நட்டத்தை மதிப்பிட்டு இறுதி அறிக்கையை சமர்ப்பித்தல் 2022 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் இடம்பெற்றிருக்காததுடன், அதற்காக அமைச்சினால் செய்யப்பட்டிருந்த ரூபா 135,085 தொகையினை பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த வாகனம் தொடர்பாக விசாரித்து பரிந்துரை வழங்கப்பட்டுள்ளதுடன், மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | நிதிப்பிரமாணத்தின் படி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) நிதிப்பிரமாணம் 371(இ) | 2021 சனவரி முதல் செப்தெம்பர் வரை பல்வேறு பணிகளிற்காக 10 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்த ரூபா 224,020 செயல்நிமித்த உப கட்டுநிதிகள் குறித்த பணிகள் நிறைவேற்றப்பட்டவுடன் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. மேலும் இராஜாங்க அமைச்சின் இரண்டு உத்தியோகத்தர்களிற்கு வழங்கப்பட்டிருந்த முற்பணங்கள் தீர்வு செய்யப்படு முன்னரே மீண்டும் முற்பணங்கள் வழங்கப்பட்டிருந்தன. | எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகள் இடம்பெறாதிருக்க நடவடிக்கை எடுக்குமாறு உத்தியோகத்தர்களிற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக் கையின் 3.1 ஆம் பந்தி | அமைச்சுக்குச் சொந்தமான வாகனங்களிற்காக எரிபொருள் நுகர்ச்சிப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை | குழாம் வாகனங்களிற்காக எரிபொருள் நுகர்ச்சிப் பரிசோதனை மேற்கொள்வத ற்குத் தேவையான ஏற்பா டுகள் செய்யப்பட்டுள்ளன. | பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிராகரம் எரிபொருள் நுகர்ச்சிப் பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஈ) | 2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் 3.1.6 ஆம் பந்தி | 2021 ஆம் ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வை மேற்கொண்டு அந்த அறிக்கையை 2021 மார்ச் 17 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்க வேண்டிய போதிலும், 2021 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் அந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வு உரிய திகதியில் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றேன். | பொது நிதிச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிராகரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடுதல்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 2014/01 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2021 ஆம் ஆண்டிற்காக அமைச்சுக்கென செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், அந்தச் சுற்றறிக்கையின் 3 ஆம் பந்தியின் பிரகாரம் உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டிய மீளாய்வாண்டிற்காக நாளதுவரையாக்கப்பட்ட கட்டமைப்பு வரைபடம், அங்கீகரித்த ஊழியர் கோப்பு மற்றும் பதவியணியினர் தொடர்பான விபரங்கள், வருடத்தின் செயற்பாடுக ளிற்குத் தேவைப்படுகின்ற கட்டுநிதித் தேவைப்பாட்டுத் திட்டம், திட்டமிடப்பட்டிருந்த பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களிற்காக வருடாந்த கொள்வனவுத் திட்டம் மற்றும் உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் என்பன அதில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டுக்குரிய செயல் நடவடிக்கைத் திட்டத்தை சுற்றிக்கையின் ஏற்பா டுகளின் படி தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள் ளது. | பொது நிதிச் சுற்றறிக் கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயல் நடவடி க்கைத் திட்டம் தயாரிக் கப்பட வேண்டும். |

## 3.2 எதிர்பார்க்கப்பட்ட பெறுபேற்று மட்டங்களை அடைந்திருக்காமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அமைச்சினால் மீளாய்வாண்டில் ரூபா 775 மில்லியன் நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டு அமைச்சின் கீழ் ஒரு செயற்திட்டத்தையும், தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களத்தின் கீழ் நான்கு செயற்திட்டங்களையும், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் கீழ் மூன்று செயற்திட்டங்களையும் மாவட்டச் செயலகங்களின் ஊடாக இரண்டு செயற் திட்டங்களையும் செயற்படுத்துவதற்கு திட்டமிடப் பட்டிருந்தது. அதில் ரூபா 61.21 மில்லியன் நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மடு தேவாலய நீர் வழங்கல் செயற்திட்டத்துடனும் கிராமிய நீர் வழங்கல் மற்றும் சுத்திகரிப்புச் செயற் திட்டத்துடனும் தொடர்புடைய 10 செயற்பாடுகள் தொடர்பில் எவ்வித பௌதீக செயல் முன்னேற்றமும் அடையப்பட்டிருக்கவில்லை. | மடு தேவாலய நீர் வழங்கல் செயற்திட்டம் யாவருக்கும் நீர் வழங்கல் வேலைத்திட்டத்தின் கீழ் உள்ளடக்கப்பட்டிருந்தமை காரணமாக அதற்குரிய நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. | வருட ஆரம்பத்தில் திட்டமிடப்பட்டவாறு எதிர்பார்க்கப்பட்ட செய ல்முன்னேற்றத்தை அடைந்து கொள்வத ற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த ரூபா 191.93 மில்லியன் நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த நீரேந்துப் பிரதேச பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டம், கிராமிய நீர் வழங்கல் மற்றும் சுத்திகரிப்பு மேம்பாட்டுச் செயற்திட்டம், சிறுநீரக நோய் நிவாரண நிகழ்ச்சித்திட்டம் ஆகிய 03 செயற்திட்டங்களுடன் தொடர்புடைய 20 செயற்பாடுகளை மீளாய்வாண்டில் மேற்கொள்வ தற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அவை பூரணப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நிலவிய தோற்றுநோய் பரவு தல், சந்தையில் நிர்மாணப் பொருட்களின் பற்றாக்குறை, நிலவிய பாதகமான கால நிலை மற்றும் நீர்க் குளாய் களை வழங்க முடியாதிரு ந்தமை போன்ற காரணங்க ளால் ஏனைய செயற்திட்ட ங்களில் எதிர்பார்த்த செயல் முன்னேற்றத்தை அடைய முடிந்திருக்கவில்லை | -மேற்படி- |

## 3.3 எதிர்பார்க்கப்பட்ட பிரதிநலன்களை பெற்றுக் கொண்டிருக்காமை

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அமைச்சின் நிதி ஏற்பாட்டின் கீழ் தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப் மழை நீர்த் தொட்டிகள் நிர்மாணித்தல் செயற்திட்டத்தின் அடிப்படைக் குறிக்கோள் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் நீர்த் வழங்கல் முறைமையின் ஊடாக நீரை வழங்க முடியாதுள்ள கிராமிய மற்றும் பின்தங்கிய பிரதேசங்களிலுள்ள மக்களுக்கு பாதுகாப்பான குடிநீரை வழங்குவதாக காணப்பட்ட போதிலும், | குறித்த செயற்திட்டம் அல்லது அளவுகோல்களிற்கு அமைய பயனாளிகளை தேர்ந்தெடுத் தல் திணைக்களத்திற்கு இணைக்கப்பட்டுள்ள அபிவிரு த்தி உத்தியோகத்தர்களினதும் இடத்திற்குப் பொறுப்பாகவுள்ள உத்தியோகத்தர்களினதும் பொறுப்பாவதுடன் அதன்படி | எதிர்பார்க்கப்பட்ட பய னாளிகளை முறை யான அடிப்படையில் இனங்காண்பதற்கும் குடிநீரின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| உரிய முறையில் பயனாளிகள் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்காமையால் அத்தியாவசியத் தேவைப்பாடு காணப்படுகின்ற நபர்களிற்கு நீர் வழங்கல் வழங்கப்பட்டிருக்காமை மற்றும் தொட்டிகளில் சேகரிக்கப்பட்டுள்ள நீரை குடிப்பதற்கு ஏற்ற தரத்தில் மாற்றுவதற்கு பொருத்தமான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்காமை புத்தளம் மாவட்டத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்த மழை நீர்த் தொட்டிகள் தொடர்பாக மேற்கொண்ட பௌதீக கணக்காய்வுப் பரிசோதனையில் அவதானிக்கப்பட்டது. | பயனாளிகள் பதிவேடு தயாரிக் கப்பட்டுள்ளது. முறைப்படி பராமரிக்கப்படாத கட்டமைப்புக ளிற்காக அபிவிருத்தி உத்தி யோகத்தர்களின் முயற்சியுடன் எளிமையான வடிகட்டல்கள் தயாரிக்கப்பட்ட போதிலும், அவற்றை முறைப்படி தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |

### 3.4 செயற்றிட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததும் இராஜாங்க அமைச்சின் நிதி ஏற்பாட்டின் கீழ் தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையால் மேற்கொள்ளப்படுகின்ற துமான திஸ்ஸமஹாராம நீர் வழங்கல் செயற்திட்டம், திருகோணமலை நீர் வழங்கல் செயற்திட்டம், கேகாலை மாவட்ட மீளக் குடியமர்த்தல் கிராமங்களிற்கான நீர் வழங்கல் செயற்திட்டம் மற்றும் அந்தரகஸ்யாய நீர் வழங்கல் திட்டம் போன்ற நீர் வழங்கல் செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் குறிப்பிடத்தக்க காலதாமதம் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டதுடன், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அச்செயற்திட்டங்களை பூரணப்படுத்த முடிந்திருக்கவில்லை. | கருத்துரை வழங்கப்பட்டிருக்க வில்லை. | திட்டமிடப்பட்டவாறு செயற்திட்டங்களை பூரணப்படுத்த நடவடி க்கை எடுக்க வேண்டு மென்பதுடன், அது தொடர்பில் அமைச்சின் நேரடிக் கண்காணிப்பு இடம்பெறுதல் வேண் டும். |

### 3.5 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் படி இராஜாங்க அமைச்சினால் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களிற்குள் வருடாந்த செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றித்துக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டு மென்பதுடன், திறைசேரிச் செயலாளரின் பிஏஎ.்.ப்டீ/ஆர்ஈடீ/ஆர்ஈஜீ/02/சீசீ/01/2021 ஆம் இலக்க 2021 மே 12 ஆந் திகதிய கடிதத்தின் படி 2020 ஆம் ஆண்டிற்கான செயலாற்றல் அறிக்கை 2021 யூன் 30 ஆந் திகதிக்கு முன்னர் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருத்தல் வேண்டும். இருப்பினும், இராஜாங்க அமைச்சின் | நிலவிய கொரோனா நோய்த் தொற்று காரணமாக அதனைத் தயாரித்து மும்மொழிகளிற்கும் மொழிபெயர்ப்புச் செய்து 2021 யூலை 16 ஆந் திகதியன்று பாராளுமன்றத்தில் முன்வைக் கப்பட்டது. | அரசாங்க நிதிச் சுற்ற றிக்கை மற்றும் திறை சேரிச் செயலாளரின் பரிந்துரையின் படி வருடாந்த செயலாற் றல் அறிக்கை பாராளு மன்றத்தில் முன்வைக் கப்படுதல் வேண்டும். |

2020 ஆம் ஆண்டிற்கான செயலாற்றல் அறிக்கை 2021 யூலை 16 ஆந் திகதியன்றே பாராளுமன்றத்தில் முன்வைக்கப் பட்டிருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

### 3.6 கொள்வனவுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கொள்வனவு வழிகாட்டல்கள் கையேட்டின் 3.4.3 (அ), (ஆ), (இ) மற்றும் (ஈ) ஆம் வழிகாட்டல் களின் படி வழங்குனர்களைப் பதிவுசெய்தல், கொள்வனவுகளை மேற்கொள்கையில் குறித்த பதிவுசெய்யப்பட்ட வழங்குனர்களிற்கு மாத்திரம் மட்டுப்படுத்துதல் மற்றும் பதிவுசெய்யப்பட்ட வழங்குனர்களின் பட்டியலை ஆகக்குறைந்தது வருடத்திற்கு ஒரு முறையேனும் நாளது வரைப்படுத்துதல் என்பன இடம்பெற்றிருக்க வேண்டிய போதிலும், இராஜாங்க அமைச்சினால் மீளாய்வாண்டில் வழங்குனர்களைப் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | 2021 ஆம் ஆண்டில் வழங்குனர்களைப் பதிவு செய்வதற்கு முடியாதிருந்த போதிலும், 2022 ஆம் ஆண்டிற்காக தற்போது வழங் குனர்கள் பதிவு செய்யப்பட்டு ள்ளனர். | அரசாங்க கொள்வ னவு வழிகாட்டல்கள் கையேட்டிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்படுதல் வேண்டும். |

### 3.7 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இராஜாங்க அமைச்சினால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி ஏனைய அரசாங்க நிறுவனங்களிற்குச் சொந்தமான 12 வாகனங்கள் அமைச்சினால் மீளாய்வாண்டில் பயன்படுத்தப்பட்டிருந்தன. | இந்த அமைச்சுக்கு உரித்தாக வாகனங்கள் இல்லை என்பதால் நீர் வழங்கல் அமைச்சுக்கு உரித்தான வாகனங்கள் மாத்திரம் இந்த அமைச்சின் பயன்பாட்டிற்காக வழங்கப்பட் டுள்ளன. | ஏனைய நிறுவனங்களி ற்குச் சொந்தமான வாகனங்களை பயன்ப டுத்துகையில் அவற்றை முறையாக கையேற்ப தற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.8 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இராஜாங்க அமைச்சின் ஊடகப் பிரிவால் முன்கூட்டியே தயாரிக்கப்பட்ட திட்டமொன்று இன்றி செயற்பட்டிருந்தமை காரணமாகவும் அவ்வப்போது மேற்கொள்ளப்படுகின்ற கோரிக்கைகளிற்கு அமைய காணப்படு கின்ற வாகனங்களை | அமைச்சில் குழாம் வாகனங் கள் இல்லாத சந்தர்ப்பங்களில் கொள்வனவு நடைமுறைக ளைப் பின்பற்றி செயலாளரின் ஒப்புதலுடன், வாடகை அடிப்படையில் வாகனமொன்று | முறையான மற்றும் வெளிப்படையான கொள் வனவு நடைமுறையொன் றின் மூலம் வாடகை வாகனங்களை பெற்றுக் |

| | | | |
|---|---|---|---|
| | முகாமைத்துவம் செய்ய முடியாது போயிருந்தமை காரணமாகவும் அமைச்சின் ஊடகப் பிரிவின் பணிகளிற்காக முறையான கொள்வனவு நடைமுறையொன்றை பின்பற்றாது வாடகை அடிப்படையில் வாகனங்களை பெற்றுக் கொள்வதற்காக மீளாய்வாண்டில் ரூபா 216,893 செலவிடப்பட்டிருந்தது. | பெற்றுக் கொள்ளப்பட்டதுடன், இது தொடர்பில் முழுமையான திட்டமிடலுடன் செயற்படுமாறு தனிப்பட்ட மற்றும் ஊடக செயலாளர்களிற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. | கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | அமைச்சரின் பதவியணியினருக்கு இணைந்த படிகள் மற்றும் மேலதிகநேர படிகளை செலுத்துகையில் ஒரு வாகனம் இரண்டு காலப்பகுதியிலும் பயன்படுத்தப்பட்டதாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களிற்கு இணைந்த படிகள் மற்றும் மேலதிகநேர படிகளாக ரூபா 351,848 செலுத்தப்பட்டிருந்தது. | சமர்ப்பிக்கப்பட்டிருந்த கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் சரியானதுடன், ஏனைய உறுதிச்சீட்டுக்களில் வாகனத்தின் இலக்கம் பிழையாக குறிப்பிடப்பட்டுள்ளமையால் பரிசோதனையின் பின்னர் தவறு திருத்தப்பட்டுள்ளது. | செலவினத்தை அங்கீகரித்தல், சான்றுறுதிப்படுத்தல் மற்றும் கொடுப்பனவு செய்தல் ஆகியவற்றின் போது அச்செலவினத்தின் சரியான தன்மையை உறுதிப்படுத்திய பின்னரே கொடுப்பனவு செய்யப்படுதல் வேண்டும். |

### 3.9 முகாமைத்துவ நலிவுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இராஜாங்க அமைச்சரின் பதவியணியினரின் அரசாங்க சேவைகள் சேமலாப நிதியத்திற்காக ஊழியர்களிடமிருந்தும் நிறுவனத்திடமிருந்தும் அறவிடப்படுகின்ற தொகைகளை தாமதமின்றி குறித்த நிதியத்துக்கு அனுப்பிவைக்க வேண்டிய போதிலும், 2020 ஆகஸ்ட் முதல் திசெம்பர் வரையும் 2021 சனவரி முதல் யூன் வரையுமான காலப்பகுதிக்காக ரூபா 1,230,265 ஊழியர் சேமலாப நிதித் தொகையை அனுப்பிவைப்பதில் குறிப்பிடத்தக்களவு காலதாமதம் செய்யப்பட்டிருந்தது. | காணப்பட்ட கோவிட் நிலமை இதற்கான காரணமானதுடன், தற்போது சம்பளம் செலுத்தும் போது ஊழியர் சேமலாப நிதியத்திற்கான உதவு தொகைக்கு காசோலையொன்றை அனுப்புதல் இடம்பெறுகின்றது. | அரசாங்க சேவைகள் சேமலாப நிதியத்திற்காக ஊழியர்களிடமிருந்தும் நிறுவனத்திடமிருந்தும் அறவிடப்படுகின்ற தொகைகளை தாமதமின்றி குறித்த நிதியத்துக்கு அனுப்பிவைக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்ளல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அமைச்சினால் அடையப்பட வேண்டுமென 05 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் இனங்காணப்பட்டிருந்ததுடன், அந்த இலக்குகளை அடைந்து கொள்வதற்காக பிரதான 09 செயலாற்றல் குறிகாட்டிகள் இனங்காணப்பட்டிருந்தன. இருப்பினும், அவ்வாறு இனங்காணப் பட்ட செயலாற்றல் | இராஜாங்க அமைச்சு உத்தியோகபூர்வமாக 2020 செப்டெம்பர் 07 ஆந் திகதி முதலே செயற்பட்டிருந்தமையால் ஆண்டு முழுவதும் செயற்படுத்தப்பட்டிருந்த நிகழ்ச்சித்திட்டத்திற்காக ஆரம்பத்தில் | நிலைபேறான இலக்குகளை இனங்கண்டு அவற்றை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | குறிகாட்டிகளிற்கான இலக்குகள் இனங்காணப்பட்டு செயல் முன்னேற்றம் அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. | உறுதியான இலக்குகளை வழங்க முடிந்திருக்கவில்லை. | |
| (ஆ) | நிலைபேறான இலக்குகளை அடைந்து கொள்வதற்காக எந்தவொரு செயலமர்வும் மீளாய்வாண்டில் நடத்தப்பட்டிருக்கவில்லை. | அமைச்சிற்கு உத்தியோகத்தர் களை இணைத்துக் கொள்ளல் 2020 செப்தெம்பர் 16 முதல் இடம்பெற்றமையாலும் அப் போது நாட்டில் நிலவிய கோவிட் நோய்த்தொற்று காரண மாகவும் செயலமர்வுகளை நடாத்த முடியாது போயிருந்தது. | -மேற்படி- |
| (இ) | 2018 ஏப்ரல் 27 ஆந் திகதிய எம்.எஸ்.டீ.டபிள்யூ/8/65 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி மற்றும் வனச் சீவராசிகள் அமைச்சின் சுற்றறிக்கையின் படி நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதற்காக இரண்டு ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்கள் மீளாய்வா ண்டின் இறுதி வரையிலும் பெயரிடப்பட்டிருக் கவில்லை. | 2021 முதல் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் மற்றும் ஒருங்கிணைப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக திட்டமி டப்பட்டது. | நிலைபேறான அபிவிருத்தி மற்றும் வனச் சீவராசிகள் அமைச்சின் சுற்றறிக் கையின் படி செய ற்படுதல் வேண்டும். |

**5. நல்லாளுகை**

--------------

**5.1 உள்ளகக் கணக்காய்வு**

---------------------------------

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 40(1) ஆம் பிரிவு மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் கோவையின் 128 (அ), (ஆ) மற்றும் 133 ஆம் இலக்க நிதிப்பிரமாணங்களின் படி கணக்கீட்டு உத்தியோக த்தரின் கடமைகள் மற்றும் பொறுப்புக்களை நிறைவேற்றுகையில் பலம்மிக்க உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை அமுல்படுத் துவதற்காக உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று தாபிக்கப்பட வேண்டுமென்பதுடன் தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 41 ஆம் பிரிவின் படி கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கூட்டங்கள் உரியவாறு நடாத்தப்படுதல் வேண்டும். இருப்பினும், இராஜாங்க அமைச்சுக்காக அங்கீகரிக்கப்பட்டிருந்த பதவியணியில் உள்ளகக் கணக்காய்வாளர் பதவி அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், அந்தப் பதவிக்கு ஆட்சேர்ப்பை மேற்கொண்டு அமைச்சின் செயலாற்ற லையும் பயனுறுதித் தன்மையையும் உயர் மட்டத்தில் பேணிச் செல்வதற்கு உள்ளகக் கணக்காய்வுப் பிரிவை ஸ்தாபிப்தற்கும் அதனை செயற்பாடுடையதாக பராமரிப்பதற்கும் மீளாய்வாண்டின் இறுதிவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உள்ளகக் கணக்காய்வுப் பிரிவை ஸ்தாபிப்தற்காக உள் ளகக் கணக்காய்வாளர் பதவி க்கு தகுதியான பதவிநிலை உத்தியோகத்தர் ஒருவர் கோரப்பட்டிருந்த போதிலும், இது வரை கிடைக்கவில்லை. அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். | தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் நிதிப் பிரமாணங்கள் கோவையின் ஏற்பாடு களின் படி செயற்ப டுதல் வேண்டும். |

## 6. மனித வள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அனைத்து மட்டங்களிலும் அங்கீகரித்த ஊழியர் எண்ணிக்கையில் காணப்படுகின்ற வெற்றிடங்கள் 50 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான உயர் வீச்சில் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. அது ஒட்டுமொத்த ஊழியர் எண்ணிக்கையில் 64 சதவீதமாகக் காணப்பட்டது. | வெற்றிடங்களை நிரப்புவதற்காக அமைச்சரவை அமைச்சிடமும் அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிடமும் பல்நோக்கு அபிவிருத்தி விசேட படை திணைக்களத்திடமும் பல்வேறு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. இருப்பினும், அந்தப் பதவகளிற்கு உத்தியோகத்தர்கள் வழங்கப்படவில்லை. | வெற்றிடங்களை விரைவாக நிரப்புவதற்கு அல்லது அமைச்சின் தேவைக்கேற்ப அங்கீகரிக்கப்பட்ட பதவிகளை திருத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் பணிப்பாளர் பொறியியல், கணக்காளர், உள்ளகக் கணக்காய்வாளர், உதவிச் செயலாளர் மற்றும் பொறியியலாளர் போன்ற உயர் பதவிகளிற்கு 07 உத்தியோகத்தர்கள் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும், அந்த உத்தியோகத்தர்கள் ஆட்சேர்க்கப்பட்டிருக்கவில்லை. அதன்படி, அது அமைச்சின் செலாற்றல் மீது பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும் விடயமாகும் என்பதை கணக்காய்வில் மறுக்க முடியாதுள்ளது. | வெற்றிடங்களை நிரப்புவதற்காக எழுத்துமூல கோரிக்கை விடுக்கப்பட்ட போதிலும், அந்த வெற்றிடங்கள் நிரப்பப்படவி ல்லை. | -மேற்படி- |
| (இ) | அமைச்சின் அங்கீகரித்த ஊழியர் கோப்பில் இரண்டு சாரதி பதவிகள் வெற்றிடமாகக் காணப்படுகையில் இராஜாங்க அமைச்சின் இரண்டு சிரேஷ்ட நிலை உத்தியோகத்தர்களிற்காக நீர் வழங்கல் சபையின் இரண்டு ஊழியர்கள் சாரதிப் பதவியில் பணிக்கமர்த்தப்பட்டு அவர்களிற்காக 2021 ஆம் ஆண்டில் சம்பளம், படிகள் மற்றும் மேலதிகநேர படியாக ரூபா 4,314,146 செலவினம் சபையால் செய்யப்பட்டிருந்தது. மேலும், இவ்வாறு ஆட்சேர்க்கப்பட்டிருந்த ஒருவர் சாரதியாக அன்றி தொழிலாளராக சபையால் ஆட்சேர்க்கப்பட்டவர் என்பது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. | நீர் வழங்கல் அமைச்சின் வாகனத்துடன் வழங்கப்பட்ட உத்தியோகத்தர்கள் தற்போது அந்தக் கடமைகளை செய்து வருகின்றனர். | ஏனைய தரப்பினரிடமிருந்து பெறப்பட்ட மனித வளத்தை குறித்த நிறுவனத்திற்கு விடுவித்தல் வேண்டும். |